வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 26.12.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 360 | பக்கங்கள் : 08

# புதிய அரசமைப்பை உருவாக்க அரசுக்கு வரலாற்று வாய்ப்பு

## அதுவரை 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த சர்வதேச சிறுபான்மையினக்குழு வலியுறுத்தல்

பிரஸ்ஸல்ஸ், டிசெம்பர் 26

இலங்கையின் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அவசியமான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் கூடிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க வாய்ப்பு தேசிய மக்கள் சக்தி வசமிருப்பதாகவும், அதனை உருவாக்கும் வரை 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் சர்வதேச சிறுபான்மையினக்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் சீர்குலைந்துவரும் சிறுபான்மையின அரசியல் போக்கு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் செயல்படும் 'சர்வதேச சிறுபான்மை இனக் குழு' அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள 50 பக்க ஆய்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கை அரசியலின் மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் இவ்வறிக்கை வெளியிடப்படுகின்றது. சிறுபான்மை இனத்தவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் மாற்றத்தை முன்னிறுத்தி, சமத்துவத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் ஒடுக்குமுறைகளை இல்லாதொழித்தல் ஆகிய வாக்குறுதிகளை அளித்த கட்சியொன்றை வாக்களித்துத் தெரிவுசெய்துள்ளனர். நாட்டின் பெரும்பான்மையின மக்களைப்போல அவர்களும் ஊழலை முடிவுக்குக் கொண்டுவருதல், அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல் மற்றும் 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின் பின்னரான பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பனவற்றையே கோருகின்றனர். அவற்றை உறுதிப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 07

# சுனாமி பேரழிவு நிகழ்ந்து இன்றுடன் 21 ஆண்டுகள்!

## நாடு முழுவதும் நினைவேந்தல்கள் தேசிய பாதுகாப்பு தினம் காலியில்

யாழ்ப்பாணம், டிசெ. 26

சுனாமி பேரழிவு நிகழ்ந்து இன்றுடன் 21 ஆண்டுகள் நிறைவடைகின்றன. சுனாமியால் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இதேநேரம், தேசிய பாதுகாப்பு தினத்தின் பிரதான நினைவுகூரல் காலி மாவட்டத்தின் பெராலிய சுனாமி நினைவுத்தூபியில் காலை 07

# யாழ். புனித மரியன்னை பேராலய நத்தார் திருப்பலி



யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். மறைமாவட்டத்துக்கான பிரதான நத்தார் நள்ளிரவு திருப்பலி புனித மரியன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இம்முறை நத்தார் கொண்டாட்டங்களை தவிர்த்து, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர் 07

# மீண்டும் கொழும்பு வந்தார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 26

முன்னாள் ஜனாதிபதியும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ, தற்காலிகமாக கொழும்பு, நுகேகொடை பகுதியில் உள்ள இல்லம் ஒன்றில் குடியேறியுள்ளதாக அவரது ஊடகப் பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத் 07

# போர்க்குற்றவாளிகளுக்கு எதிரான தடைகள் பரவலாக்கப்பட வேண்டும்

## பிரித்தானியாவில் வலுக்கும் கோரிக்கை

லண்டன், டிசெ. 26

"போர்க் குற்றவாளிகளுக்கு எதிரான பிரித்தானிய அரசாங்கத்தின் தடை விதிப்பு மேலும் பரவலாக்கப்பட வேண்டியது அவசியம்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன்.

இதேவேளை, இலங்கை போர்க் குற்றவாளிகள் நால்வருக்கு கடந்த மார்ச் மாதம் பிரித்தானிய அரசாங்கம் தடைகளை விதித்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பான நடவடிக்கைகள் முன்நோக்கியே நகர்கின்றன. தடை விதிப்புகள் தொடருமென வெளிவிவகார அமைச்சர் வெற்றே கூப்பர் அறிவித்துள்ளார்.

பிரித்தானிய பாராளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழு கூட்டம் அண்மையில் இடம்பெற்ற நிலையில் அங்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன், இலங்கையை சர்வதேச குற்றவியல் 07

# தையிட்டி விகாரை விடயத்தில் பொறுமையை சோதிக்கக்கூடாது

## இப்படி எச்சரிக்கிறார் வீரசேகர

கொழும்பு, டிசெ. 26

தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் எமது பொறுமையை மீண்டும் மீண்டும் சோதிக்கக்கூடாது. இலங்கை பௌத்த நாடென்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்க வேண்டும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"திஸ்ஸ விகாரைக்கு அழுத்தம் கொடுத்து, 07

# பரராஜசிங்கம் படுகொலை: நீதி வேண்டி போராட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 26

மட்டக்களப்பில் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இருந்து மாநகர சபை மண்டபம் வரை நீதி வேண்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 07



# இலங்கையின் மறுகட்டமைப்புக்கு இந்தியாவின் உதவிகள் தொடரும்

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி

புதுடில்லி, டிசெ. 26

டித்வா சூறாவளி பாதிப்புக்கு பிறகு இலங்கையின் மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையையும் 07

# "கோட்டாவின் கொள்கையை அநுரவும் பின்பற்றக்கூடாது"

கொழும்பு, டிசெ. 26

கோட்டாபய ராஜபக்ஷவின் இராணுவத்துக்கு முன்னுரிமை என்ற கொள்கையை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடைப்பிடிக்கக்கூடாது. தேசிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு 07

# நத்தார் பண்டிகை என்பது வர்த்தக திருவிழா அல்ல

## பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

கொழும்பு, டிசெ. 26

நத்தார் பண்டிகையை வர்த்தகப் பொருளாதாரம்-பணம் சம்பாதிக்கும் ஒரு விழாவாக மாற்றிவிட்டனர். ஆனால், நத்தார் என்பது ஒரு வர்த்தகத் திருவிழா அல்ல என்பதை அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு உஸ்வெட்ட கெய்யாவ புனித மரியாள் தேவாலயத்தில் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் 23 வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி, டிசெ. 26

வடமராட்சியில் புனரமைக்கப்படுகின்ற 23 வீதிகளையும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அரசாங்கத்தால் மாகாணத்துக்கு விசேடமாக குறித்து ஒதுக்கப்பட்ட நன்கொடை நிதி ஊடாக இந்த வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பல வேறு வீதிகளும் புனரமைக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப் பினர் ரஜீவன் குறிப்பிட்டிருந்தார்.

(எ-02-08)

## திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் வடமராட்சி கிழக்கு மக்கள்

### தவிசாளர் யுகதீஸ் குற்றச்சாட்டு

வடமராட்சி, டிசெ. 28

வடமராட்சி கிழக்கு மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறார்களா? என்று பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் கேள்வி எழுப்பியுள்ளார்

அதிகளவான இடங்களில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்று வருகின்ற போதிலும் நீண்ட காலமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் மட்டும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெறவில்லை.

வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தலைவராக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன், தனது முகநூலில் கடந்த 23ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெறும் என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பலர் அறிந்திருக்கவில்லை. அதன் பின்புதான் முகநூலில் ஒருங்கிணைப்புக் குழு கூட்ட திகதி மாற்றப்பட்டிருப்பதாக ரஜீவன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெறுவதற்கு முன்பு பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெற வேண்டும். அவ்வாறு இடம் பெற்றால்தான் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாம் தீர்க்கப்படாத பிரச்னைகள் தொடர்பில் கலந்தாலோசிக்க முடியும்.

நீண்ட காலமாக வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெறாமை கவலையளிக்கின்றது. வடமராட்சி கிழக்கு மக்களின் தீர்க்கப்படாத பல பிரச்னைகள் காணப்படுகின்றன- என்றார்.

(எ-02-08)

## தவிசாளருக்கு ஆசனம் ஒதுக்க மறுப்பு; ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் காலை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் சிறீபவானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பிரதேச சபை தவிசாளருக்கும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும் என வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஷ் கோரிக்கை முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது, நீங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் அமர வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சிறீபவானந்தராஜா எம். பி. தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால், அனுமதியின்றி கூட்டத்துக்கு வருகை தந்த பிரதேச சபை உறுப்பினர்களை வெளியேற்றுமாறு ஒருங்கிணைப் புக்குழு தலைவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து சிறிதுநேர வாக்குவாதத்தின் பின்னர் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


(எ)

## அனர்த்தத்தின் பின்னரான நிலைமைகள் குறித்து திணைக்கள தலைவர்களுடன் அரச அதிபர் ஆய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 26

அண்மையில் ஏற்பட்ட "டித்வா புயல்" வெள்ள அனர்த்த நிலைமைகளுக்குப் பின்னராக எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் மற்றும் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அர சாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், அனர்த்த நிலைமைகளில் கடமையாற்றிய சகல திணைக்களத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நன்றிகள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு, உலர் உணவு மற்றும் 25, 000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்றளவான பணிகள் செவ்வனே செய்யப்படுகின்றன. எனினும், ஒரு சில உத்தியோகத்தர்களின் கவனயீனங்களால் சில சம்பவங்களும் இடம்பெற்றன.



மேலும், அனர்த்தத்துக்கு பின்னரான நிலைமைகள் தொடர்பான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஒவ்வொரு துறைசார் விடயங்களாகவும், மாவட்ட ரீதியான முழுமையான விவரங்களையும் ஜனாதிபதி கேட்டறிந்து கொண்டார். அத்தோடு, ஒரு வார காலத்துக்குள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உட்கட்டுமானங்களின் சேத விவரங்கள் உள்ளிட்ட முழுமையான விவரங்களை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.- என்றார்.

மேலும், அனர்த்தத்தால் தங்கள் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட வீதி, இறங்கு துறை, விவசாயம், கடற்றொழிலில் உள்ளடங்கலான உட்கட்டுமான பாதிப்புக்களை ஆராய்வதே இந்தக் கூட்டத்தின் நோக்கம் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேலும், சரியான தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் பேணுவதன் அவசியத்தை அரசாங்க அதிபர் குறிப்பிட்டு, உரிய நேரத்தில் அறிக்கையிடலின் அவசியத்தையும் வலியுறுத்தி, அனைவரையும் கூட்டுப் பொறுப்புடனும் வினைத்திறனாகவும் செயல்பட ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட உட்கட்டுமான சேத விவரங்களை கேட்டறிந்ததுடன் பிரதேச செயலாளர்களுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களும் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன.

(எ)

## சுற்றுலா பயணிகளின் வருகை 22. 5 இலட்சத்தை தாண்டியது

கொழும்பு, டிசெ. 26

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 22 இலட்சத்து 50 ஆயிரத்தை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 22 இலட்சத்து 58,202 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.


இவ்வாறு வருகை தந்தவர்களில் அதிகமானோர் இந்தியப் பிரஜைகளாவர். இந்தியாவில் இருந்து 5 இலட்சத்து 10 ஆயிரத்து 133 பேரும், பிரித்தானியாவில் இருந்து 2 இலட்சத்து 4,703 பேரும், ஜேர்மனியில் இருந்து ஓர் இலட்சத்து 41 ஆயிரத்து 941 பேரும் மற்றும் சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 29,403 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, டிசெம்பர் மாதத்தின் முதல் 21 நாட்களில் மட்டும் ஓர் இலட்சத்து 54 ஆயிரத்து 609 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## நேயகம பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவை கால விசேட பூஜை





அநுராதபுரம், டிசெ. 26

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், அநுராதபுரம் நேயகம பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பா கால விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

நேற்று வியாழக்கிழமை காலை இந்த வழிபாடுகள் நடைபெற்றன.

பெரும்பான்மை இன மக்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் சைவ மக்களின் வழிபாட்டுக்காக இந்த ஆலயம், சந்நிதியான் ஆச்சிரமத்தால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

(எ-08)

## வவுனியா- சூடுவெந்தபிலவில் மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, டிசெ. 26

வவுனியா- சூடுவெந்தபிலவு கிராமத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டதாக தெரிவித்து கிராம மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிராம உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50 பேர் வரையில் கலந்து கொண்டனர். அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பலருக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக பதாகைகளை தாங்கியிருந்ததோடு கோஷங்களையும் எழுப் பினர்.

இதேவேளை, பாரபட்சமற்ற முறையில் குறித்த நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

(எ-10)

## 2,341 துப்பாக்கிகள் கைப்பற்றல்

கொழும்பு, டிசெ. 26

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகள் மூலம் மொத்தமாக 2, 341 துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவற்றில் 73 ரி - 56, 59 ரிவால்வர்கள், 83 பிஸ்டல்கள், 2,126 ஏனைய ரக துப்பாக்கிகள் அடங்கும்.

இந்த ஆண்டில் இதுவரை 1,793 கிலோ 139 கிராம் ஹெரோயின், 3,683 கிலோ 163 கிராம் ஐஸ், 16,686 கிலோ 62 கிராம் கஞ்சா, 37 கிலோ 899 கிராம் கொக்கைன் மற்றும் 746 கிலோ 673 கிராம் ஹஷிஸ் போதைப்பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.12.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மாகாண சபைகள் தேர்தலின் அவசியம்

மாகாண சபைகள் தேர்தல் தமிழ் மக்களுக்கான தீர்வு இல்லை என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரிடம் தமிழ் கட்சிகள் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு வலியுறுத்தியதைத் தொடர்ந்தே, பொன்னம்பலம் மேற்படி கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

குறித்த சந்திப்பில் கஜேந்திரகுமாரும் பங்குகொண்டு தனது கருத்துகளைப் பகிர்ந்திருந்தார். ஆனால், அதன் பின்னர் தான் மட்டுமே மற்றவர்களிலிருந்து வேறுபட்டதான கருத்துகளையே பொதுவெளியில் கூறி வருகிறார். தமிழ் அரசியலிலுள்ள இன்னொரு சிக்கலான பிரச்னை இதுதான் - இதன் காரணமாகவே இராஜதந்திர தரப்புகள் முக்கியமாக புதுடில்லி, தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளை பெரிதுபடுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

மாகாண சபைகள் தேர்தல் தமிழ் மக்களுக்கான, இறுதியான அரசியல் தீர்வு என்று எந்தவொரு கட்சியும் கூறவில்லை. ஆனால், தற்போதுள்ள சூழலில் மாகாண சபைகள் தேர்தல் இடம்பெற்றால் மட்டும்தான் தமிழர்கள் அரசியலில் முன்னோக்கி நகரமுடியும் - இதனைத்தான் யதார்த்தமாக சிந்திப்பவர்கள் முன்னிலைப்படுத்தி வருகின்றனர். அந்த நிலைப்பாடு முற்றிலும் சரியானது. உதாரணமாக மாகாண சபைகள் தேர்தல் இடம் பெறவில்லை என்று வைத்துக் கொண்டால், அடுத்தது என்ன? என்ன திட்டத்தைத் தமிழ்க் கட்சிகள் கொண்டிருக்கின்றன? ஆயுதப் போராட்டமா அல்லது அறகலய போன்ற மக்கள் எழுச்சியா?

சிறு எண்ணிக்கையானவர்களுடன் கொடிகளுடன் நின்று சத்தமிடலாம் - தமிழ் தெரியாத பொலிஸாரிடம் வீரவசனங்களைப் பேசலாம். பல்கலைக்கழக மாணவர்கள் என்னும் பெயரில் ஒரு சிலர் சத்தமிடலாம் - கடந்த பதினாறு வருடங்களாக இப்படியான எத்தனை சத்தமிடும் நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன - அவற்றால் நடந்தது என்ன?

ஓர் அரசியல் நகர்வு என்பது, ஒரு விடயத்தை வலியுறுத்துவதுடன் முடிந்து விடுவதில்லை. ஆனால், யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினாறு வருடங்களை எடுத்துநோக்கினால், தமிழ் மக்களுக்கான அரசியல் நகர்வு என்று குறிப்பிடும்படி எதுவும் நிகழவில்லை-சில விடயங்கள் தொடர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் சில நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைக்கூட அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து முன்னெடுக்கவில்லை. ஆகக் குறைந்தது அனைத்துக் கட்சிகளும் இணைந்து, இன்றைய சூழலுக்கு ஏற்புடையவாறான ஒரு விடயத்தை முன்வைக்கும் முயற்சியில் இன்றுவரையில் வெற்றி பெறமுடியவில்லை. ஆகக்குறைந்தது ஒரு விடயத்தில் ஒன்றுபடமுடியாத நிலையில், எவ்வாறு தாக்கம் விளைவிக்கக்கூடிய அரசியல் நகர்வை முன்னெடுக்க முடியும்?

மேலும், தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் நிலைப்பாடுகளை முன்வைப்பதும் - பின்னர் சூழ்நிலை கருதி அந்த நிலைப்பாட்டிலிருந்து இறங்கிச் செல்வதும் செல்வநாயகம் காலத்திலிருந்து நிகழும் ஓர் அரசியல் சங்கதிதான். பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களில் இணக்கம் காணப்பட்டபோது, செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நிலைப்பாடு முற்றிலும் அதற்கு மாறானதாகவே இருந்தது. பின்னர் 1976இல் வட்டுக்கோட்டை, 1977இல் மக்கள் ஆணை என்று வசனங்கள் பேசப்பட்டபோதிலும் இறுதியில் மாவட்ட சபையை நோக்கித்தான் கீழிறங்க வேண்டியேற்பட்டது. ஏனெனில், ஒரு நிலைப்பாட்டை எவரும் முன்வைக்கலாம். ஆனால், அதனை அடைவதற்கான பலம் என்பதுதான் விடயம். எப்போதுமே அரசியலில் ஒன்றை அடைவது என்பது பலத்துடன் தொடர்புடையது. இதனைப் புரிந்து கொள்ளாமல் வசனங்கள் பேசுவதும், தங்களை புனிதர்களாகக் காண்பித்துக் கொள்வதும் வேண்டுமானால், சிலரின் காதுகளுக்கு இனியதாக இருக்கலாம். ஆனால், சூழ்நிலையைக் கையாள ஒருபோதும் உதவாது.

# தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் நிறுவன ரீதியான சுயாதீனத்தை பாதுகாக்குமாறு கோரிக்கை

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, டிசெ. 26

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு நிறுவப்பட்ட காலத்தில் இருந்து ஆற்றிவருகின்ற சேவையை வெகுவாகப் பாராட்டியிருக்கும் இலங்கை சடடத்தரணிகள் சங்கம் ஆணைக்குழு அதற்குரிய ஆணையை செவ்வனே நிறைவேற்றுவதற்கு வசதியாக அதன் சுயாதீனத்தையும் ஆற்றலையும் பேணிப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு போதுமான அலுவலர்கள் இன்மையாலும் நிதியைச் சுயாதீனமாகக் கையாளமுடியாமல் இருப்பதனாலும் எதிர்நோக்குகின்ற கடுமையான சவால்கள் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் பெரும் விசனம் தெரிவித்திருக்கிறது.

தகவல்களைப் பெறுவதற்கு குடிமக்களுக்கு அரசமைப்பின் 14 பிரிவின் கீழ் வழங்கப்பட்டிருக்கின்ற உரிமையைப் பாதுகாப்பதில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு ஆற்றிவரும் முக்கியமான பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அதன் சுயாதீனமான செயல்பாடுகள் இன்றியமையாத முக்கியத்துவத்தைக் கொண்டவையாக இருக்கின்றன என்றும் சட்டத்தரணிகள் சங்கம் பாரதூரமான நிறுவன ரீதியான குறைபாடுகள் ஆணைக்குழுவின் செயல்பாடுகளை நேரடியாக மலினப்படுத்திவிடும் என்று எச்சரிக்கை செய்துள்ளது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் செயன்முறைகளில் சம்பந்தப்பட்ட முக்கியமான ஒரு தரப்பு என்ற வகையில், சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அந்த ஆணைக்குழுவின் விவகாரங்கள் குறித்து அக்கறை செலுத்துவதற்கு உரிமை இருக்கிறது. முக்கியமான நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு சிபாரிசுகளை செய்யும் அரசமைப்பு பேரவையின் ஓர் உறுப்பினராக சட்டத்தரணி ஒருவரை அல்லது சட்டத்துறை கல்விமானை நியமிப்பதற்கும் சட்ட ரீதியான அந்த ஸ்தை சட்டத்தரணிகள் சங்கம் கொண்டிருக்கிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 10 வருடங்கள் நிறைவடையவிருந்த நிலையில் கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆணைக்குழுவினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்தே சடத்தரணிகள் சங்கம் இந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கிறது.

நீண்டநாட்களாக போதுமான அலுவலர்கள் குறிப்பாக, தகுதிவாய்ந்த சட்டத்துறை அலுவலர்கள் இல்லாமையினால் சடடங்களை விளக்கி விதப்புரைகளை வழங்கும் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பிட்டிருந்தது.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு அதற்கு தேவையான அலுவலர்களை சுயாதீனமாக ஆட்சேர்ப்பதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 13 (3) ஆம், 16 ஆம் பிரிவுகள் அதிகாரமளிக்கின்றன. ஆணைக்குழுவுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியம் ஒன்றும் இருக்க வேண்டும் என்று அந்த பிரிவுகள் கூறுகின்றன.

1917 ஆம் ஆண்டில் ஆணைக்குழு நிறுவப்பட்டபோது தேசிய பட்ஜெட்டில் தனியான தலைப்பின் கீழ் அதற்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அவ்வாறான பட்ஜெட் நிதி ஒதுக்கீடு பிறகு கைவிடப்பட்டு அந்த நிதி ஊடகத்துறை அமைச்சின் தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதன் மூலமாக நிதியைக் கையாளுவதற்கு ஆணைக்குழுவுக்கு இருந்த சுயாதீனமும் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான ஆற்றலும் நியாயமற்ற முறையில் மலினப்படுத்தப்பட்டன என்று சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியிருக்கிறது.

மேலும், அரசமைப்பின் 14ஏ சரத்தின் கீழ் தகவல்களைப் பெறுவதற்கு குடிமக்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கும் உரிமைமையைக் குறைக்கக்கூடிய முறையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிக்கும் அதன் கடுமையான எதிர்ப்பை சட்டத்தரணிகள் சங்கம் வெளிப்படுத்தியிருக்கிறது.

“தகவல் அறியும் உரிமைச்சட்டத்துக்கு திருத்தம் எதையும் கொண்டு வருவதற்கு அல்லது ஆணைக்குழுவின் செயல்பாடுகளில் மாற்றம் எதையும் செய்வதற்கு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ம்ுன்னதாக ஒரு பிரதான தரப்பு என்ற வகையில் சட்டத்தரணிகள் சங்கத்துடனும் பொதுமக்களுடனும் விரிவான கலந்தாலோசனைகள் நடத்தப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்” என்று கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.


இலங்கையில் தகவல்களை அறிவதற்கு குடிமக்களுக்கு இருக்கின்ற உரிமை தெற்காசியாவில் உதாரணமான ஒரு சிறந்த நடைமுறை என்று சர்வதேசரீதியாக பரவலாக மெச்சப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை தளர்த்துவதற்கு சட்டத்துக்கு திருத்தங்களை கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய முயற்சிகள் குறித்து தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தது.

கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு ஊடகத்துறை அமைச்சால் வழங்கப்பட்ட பதிலில் உள்ள தவறை சுட்டிக்காட்டிய ஆணைக்குழு கட்டணங்களை பெற்றுக் கொண்டு தகவல்களை வழங்கும் நடைமுறை மீளாய்வு செய்யப்படுவதாகவும் அத்தகைய ஒரு மீளாய்வுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 42 வது பிரிவின் கீழ் திருத்தம் ஒன்று தேவையில்லை, வர்த்தமானி அறிவித்தல் ஒன்றே போதுமானது என்பதையும் ஆணைக்குழு தெரியப்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வாகன வசதிப் பெருகும்.

**இடபம்**

உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**கன்னி**

குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும்.

**துலாம்**

புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். அநாவசிய செலவை கட்டுப்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**தனுசு**

சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மகரம்**

குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேளை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதயாமும் உண்டு.

**கும்பம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**மீனம்**

மறைமுக விமர்சனாங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடாங்கள் வரும்.

# அரசாங்கம் அரச உத்தியோகத்தர்கள்மீது பழிவாங்கல்களை மேற்கொள்ளவில்லை

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 26

எமது அரசாங்கம், அரசாங்க உத்தியோகத்தர்கள் மீதான எதுவித பழிவாங்கல்களையும் மேற்கொள்வதில்லை என்ற கொள்கைக்கு அமைவாக செயல்பட்டு வருகிறது- என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு மத்தியில் நேர்த்தியான முறையில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எமது நன்றிகள். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் 03 தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தவர். அவரின் சிறப்பான நிர்வாக செயல்பாடுகளை அவதானித்து வருகின்றோம். 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட வரவு- செலவு திட்ட நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக ரீதியிலான முன்னேற்றத்தில் எமது மாவட்டம் முன்னிலை பெற்றதையிட்டு - ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் எமது அரசாங்கம், அரசாங்க உத்தியோகத்தர்கள் மீதான எதுவித பழிவாங்கல்களையும் மேற்கொள்வதில்லை என்ற கொள்கைக்கு அமைவாக செயல்பட்டு வருகிறது. அண்மையில் "டித்வா" புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து எமது நாடு பழைய நிலையைக்காட்டிலும் மேலும், முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் இலக்கு. இரவு- பகல் பாராமல் கடுமையாக உழைத்து வரும் ஜனாதிபதிக்கு நாம் அனைவரும் சேர்ந்து ஒத்துழைப்பு நல்கி எமது நாட்டை முன்னேற்ற வேண்டும்- என்றார்.

(எ)

# 100 சதவீத முன்னேற்றத்தை காண்பித்து முதல் இடத்தை பிடித்தது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளரின் 08. 12. 2025 ஆம் திகதிய அறிக்கையிடலின் பிரகாரம் 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக ரீதியிலான முன்னேற்றத்தின் அடிப்படையில் 25 மாவட்டங்களிலும் யாழ்ப்பாணம் மாவட்டம் 100 சதவீத முன்னேற்றத்தை காண்பித்து முதலாவது இடத்தை பெற்றுள்ளது என்று அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்தும் யாழ். மாவட்டம் முன்னிலையில் திகழ்வதற்கு பூரண ஒத்துழைப்புகளை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், அமைச்சர் இரா. சந்திரசேகரால் வழங்கப்பட்டு வரும் வழிகாட்டுதல்களுக்கும் தமது நன்றியை தெரிவித்தார்.(எ)

# பொலிஸார் துரத்தி வந்த கார் விபத்து: மானிப்பாயில் மூன்று பேர் படுகாயம்!

### கார் சாரதி கைது, இரண்டு கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

நேற்று முன்தினம் இரவு 08. 15 மணியளவில் நவாலி மூத்த நயினார் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரிய வருகையில், மானிப்பாய் பொலிஸார் கார் ஒன்றை துரத்தி வந்தனர். அந்த கார் மூத் தநயினார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தையல் கடை மற்றும் வேறு ஒரு கடையின் மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது, தையல் கடையில் இருந்து கதைத்துக்கொண்டிருந்த மூவர் படுகாயமடைந்ததுடன், அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். காரை செலுத்தி வந்த சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இரண்டு கடைகளும், மூன்று தையல் இயந்திரங்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.பொலிஸார் துரத்தி வந்ததாலேயே வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் இவ்வாறு விபத்தை ஏற்படுத்தியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து குறித்த இடத்தில் பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டுள்ளது.

# மாநகர சபையினரால் பண்ணை பகுதியில் கொல்களம் முற்றுகை: 15 மாடுகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பண்ணை பகுதியில் உள்ள கொல்களத்தில் பதிவு அனுமதியின்றி இறைச்சியாக்க கொண்டு வரப்பட்ட கன்று குட்டிகள் உள்ளிட்ட 15 மாடுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

யாழ். மாநகர சுகாதார குழுத் தலைவர் எஸ். சாருஜன், மாநகர சபை பிரதி முதல்வர் இ. தயாளன், மாநகர சபை உறுப்பினர்களான சு. நிஷாந்தன், எம். மயூரன் உள்ளிட்ட மாநகர சபை குழுவினரால் குறித்த கொல்களம் நேற்று முன்தினம் இரவு முற்றுகையிடப்பட்டது.

நத்தார் தினத்தை முன்னிட்டு அனுமதியற்ற முறையில் காது பட்டி இன்றி குறித்த மாடுகள் கொண்டுவரப்பட்டு இறைச்சியாக்க வெட்ட தயார் நிலையில் வைக்கப்பட்ட நிலையில் மாநகர சபை மேற்பார்வை உத்தியோகத்தருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மாடுகள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டதுடன் உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகநபர்களான சிறுவர்களை அழைத்துச் செல்ல தனி வாகனம்

**சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு**

கொழும்பு, டிசெ. 26

நீதிமன்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்கு சிறுவர்களுக்கென பிரத்தியேக வாகனங்களை வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதன்படி, 9 மாகாணங்களுக்கும் ஒவ்வொரு வாகனம் வழங்கப்படும் என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்படும் சிறுவர்கள் தொடர்பில் நீதிமன்றம் இறுதித் தீர்ப்பை அறிவிக்கும் வரை, அவர்களைத் தற்காலிகமாக பாதுகாப்பான இடங்களிலும், தடுப்புக்காவல் நிலையங்களிலும் வைக்குமாறு நீதிமன்றங்கள் உத்தரவிடுகின்றன.

அதற்கமைய சிறுவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணி பெரும்பாலும் சிறைச்சாலை திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. சிறை வாகனங்களில் அவர்கள் அழைத்துச் செல்லப்படும் போது அவர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு உள்ளாகின்றனர். அதுமட்டுமின்றி பாதிக்கப்பட்ட சிறுவனும் சிறுமியும் அந்தக் குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படும் சந்தேகநபரும் ஒரே வாகனத்தில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களின்போது சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய விடயங்களை கருத்தில் கொண்டு சிறுவர்களுக்கென "சிறுவர் நேய போக்குவரத்துச் சேவை" உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காகவே சிறுவர்களுக்கென தனியான வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. (ஐ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சி குழுவினர் காலி கோட்டைக்கு களப்பயணம்



கொழும்பு, டிசெ. 26

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது மத்திய குழுவின் உறுப்பினரும் ஜிசாங் தன்னாட்சி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவின் செயலாளருமான, வாங் ஜுன் ஷெங் காலி கோட்டைக்கு நேற்று பயணம் சென்றனர்.

வாங் ஜுன்ஷெங் தலைமையிலான சீனக் குழுவினர் நேற்று முன்தினம் காலி கோட்டைக்குச் சென்று கோட்டைச் சுவர்களை ஆய்வு செய்தனர். இதன்போது, பிரதி அமைச்சர் நளின் ஹேவகே உட்பட பலர் உடனிருந்தனர்.

இதன்போது அவர்களுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. (ஐ)

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக்கூறி மோசடி!

கொழும்பு, டிசெ. 26

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புத்தளம் - சிலாபம் - கொட்டபிட்டியை சேர்ந்த ஒருவர் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேக நபர், வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி 2024 ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் டிசெம்பர் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் முறைப்பாட்டாளரிடம் இருந்து சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தை வங்கி கணக்கு ஊடாகப் பெற்றுக்கொண்டு பின்னர் தொடர்புகளை துண்டித்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மோ. சைக்கிள் - பேருந்து விபத்தில் இளம் தாய் பலி

கொழும்பு, டிசெ. 26

தனியார் பேருந்து மோட்டார் சைக்கிளை மோதியதில் இளம் தாய் ஒருவர் பலியானார்.

இரத்தினபுரி எஹெலியகொடை - மஹிங்கொடை பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரியிலிருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் எதிர்த் திசையில் வந்த தனியார் பேருந்தும் மோதின. இதில், மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணும் அவரின் குழந்தையும் படுகாயமடைந்தனர்.

இருவரும் எஹெலியகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் தாய் உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் 30 வயதுடைய அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஆவார்.

எஹெலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருட்களுடன் 649 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 26

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள்சார் குற்றங்களுடன் தொடர்புடைய 649 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, 22 கிலோ 486 கிராம் ஹெரோயின், 172 கிலோ 572 கிராம் ஐஸ், 02 கிலோ 616 கிராம் கஞ்சா, 12 ஆயிரத்து 734 கஞ்சா செடிகள், ஒரு கிராம் குஷ்ரக போதைப் பொருள், 8 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 1039 போதை மாத்திரைகள், 11 கிராம் 200 மில்லி கிராம் மதன மோதகம், ஒரு கிலோ 301 கிராம் மாவா போதைப்பொ ருள் என்பன கைப்பற்றப்பட் டுள்ளன.

கைதான 649 சந்தேகநபர்களில் தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 20 பேரும் அடங்குவர். இதேநேரம், கைதானவர்களில் 9 பேரை மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பேரிடரால் பாதிக்கப்பட்ட பதுளை பாடசாலைகளுக்கு பிரதமர் விஜயம்

கொழும்பு, டிசெ. 26

மண்சரிவால் பாதிப்புகள் ஏற்படும் அச்சுறுத்தல் உள்ள பாடசாலைகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்படும் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பதுளை மாவட்ட பாடசாலைகளை அவர் நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர், மீகஹகிவுல தேசிய பாடசாலை, கெட்டவத்தை, யோதஉல்பத்த சமூக மண்டபத்தில் இயங்கிவந்த பாலர் பாடசாலை, பசறை யூரி தமிழ் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றை கல்வி அமைச்சு, யுனிசெவ் அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளையின் 68 வீத நிலம் நிலச்சரிவு அபாயத்தில்!

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்

பதுளை, டிசெ. 26

பதுளை மாவட்டத்தில் உள்ள மொத்த நிலத்தில் கிட்டத்தட்ட 68 சதவீதம், நிலச்சரிவு அபாயத்தில் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதகமான வானிலை காலத்தில் பதுளை மாவட்டத்தில் 368 பெரிய நிலச்சரிவுகள் பதிவாகியுள்ளதாக அந்த அமைப்பின் பதுளை மாவட்ட புவியியலாளர் ஹர்ஷனி பெரேரா தெரிவித்தார்.

இதன் விளைவாக, இதுவரை சுமார் 650 அதிக ஆபத்துள்ள வீட்டு அலகுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (எ)

# அதிசொகுசு பஸ் விபத்து



திருகோணமலை, டிசெ. 26

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதிசொகுசு பஸ் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது.

தனியாருக்கு சொந்தமான திருகோணமலை- அக்கரைப்பற்று இடையே சேவையில் ஈடுபடும் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

திருகோணமலை- மட்டக்களப்பு பிரதான வீதியின் சேருநுவர பகுதியில் இந்த விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-12)

# கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் கவனவீர்ப்பு



திருகோணமலை, டிசெ. 26

திருகோணமலைபுல்மோட்டை கனியவள கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் பணிப்பு கிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இப்பகிஷ்கரிப்பில் 300 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டனர். வருட இறுதியில் ஊழியர்களுக்கு கிடைக்க இருந்த பல கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

சாதகமான பதில் கிடைக்காவிடின் வேலை நிறுத்த போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்த நிலையில் எதிர்வரும் திங்கட் கிழமைகளுள் தீர்வு தருவதாக அறிவித்ததையடுத்து தற்காலிகமாக போராட்டத்தை கைவிட்டுள்ளதாகவும் கனிய மணலை ஏற்றுவதற்கு இடமளிக்கவில்லை எனவும் இதன்போது ஊழியர்கள் தெரிவித்தனர். (எ-12)

# அம்பாறை, மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 26

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பல இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் களுத்துறை, பதுளை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

# காடு மண்டிக் காணப்படும் நுரைச்சோலை வீட்டு திட்டம்


## விரைவில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை

அக்கரைப்பற்று, டிசெ. 26

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நுரைச்சோலையில் கட்டப்பட்ட 500 வீடுகளையும் எதிர்வரும் ஒரு சில மாதங்களுக்குள் மக்களுக்கு கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரசாங்கத்தின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட நுரைச்சோலை வீட்டுத் திட்டத்துக்கு பிரதியமைச்சரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ மற்றும் அரசாங்க அதிகாரிகள் உட்பட பலரும் நேற்று முன்தினம் புதன்கிழமை சென்று அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்ட நுரைச்சோலை



வீட்டுத்திட்டம் இதுவரை மக்களிடம் கையளிக்கப்படாமல் காடாகக் காட்சியளிக்கும் நிலைமை குறித்து நாமும், அரசாங்கமும் கவலையடைகின்றோம். அந்த வகையில்தான் இந்த வீட்டுத்திட்டத்தை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் பிரகாரமே முதல் கட்டமாக பிரதி அமைச்சர் உட்பட நாம் இங்கு வந்துள்ளோம். இங்குள்ள பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு சவூதி அரசாங்கமும் எங்களுக்கு உதவிகளை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தார்.

# திருகோணமலை மாவட்ட சிறுவர் அபிவிருத்தி கூட்டம்

திருகோணமலை, டிசெ. 26

திருகோணமலை மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்தகுமார தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், மாவட்ட சிறுவர் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள், தற்போதைய நிலைமைகள், சவால்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டன.

இதில் சம்பந்தப்பட்ட அரச துறைகள், கல்வி, சமூக சேவைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மேலும் சிறுவர் நலன், பாதுகாப்பு, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் தங்கள் அனுபவங்கள், கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தனர்.

சிறுவர் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன், எதிர்வரும் காலங்களில் செயல்திறன் மிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (எ-12)

# கிழக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, டிசெ. 26

மட்டக்களப்பில் இருந்து திருமலை, கொழும்பு வரையான ரயில் சேவைகள் மீண்டும் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மழை, வெள்ளத்தால் சேதமடைந்த ரயில் பாதைகள் திருத்தப் பணிகள் யாவும் நிறைவடைந்ததன் பின்பு கடந்த சில நாட்களாக பரீச்சாத்த சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததை அடுத்து புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கான உதயதேவி ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலை திருகோணமலையிலிருந்து கொழும்புக்கான சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் இருந்து செல்லும் பயணிகள் கல் ஓயா சந்தியில் இறங்கி திருமலையில் இருந்து வரும் கொழும்பு ரயிலில் மாற வேண்டும்.

இதேவேளை மாகோவில் இருந்து மட்டக்களப்புக்கான சரக்கு மற்றும் எரிபொருள் சேவைகளும் புதன்கிழமை தொடக்கம் மீண்டும் முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# நானுஓயா - பதுளை ரயில் சேவை 2 மாதங்களில் ஆரம்பிக்கப்படும்

## போக்குவரத்து பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ. 26

இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த ரயில் பாதைகள் கட்டம் கட்டமாக புனரமைக்கப்படுகின்றன. நானுஓயா -பதுளை ரயில் சேவை இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனர்த்தத்தால் சேதமடைந்த வீதிகள் மற்றும் ரயில் பாலங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது வடக்கு மற்றும் கிழக்குக்கான ரயில் சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன. தொடர்ச்சியான புனரமைப்பு பணிகளுக்கு மத்தியில் பதுளை - அம்பேவல வரையிலான ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நானுஓயா - பதுளை ரயில் சேவையை இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். மலையகத்துக்கான ரயில் சேவை முழுமையாக வழமைக்கு திரும்ப ஒருவருடமேனும் செல்லும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க் குற்றவாளி...

நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் மற்றும் இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளல் என்பன உள்ளடங்கலாக தமிழ்ச் சமூகத்துக்கான நீதி தொடர்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லெமியிடம் தான் வலியுறுத்தியிருந்ததாக குறிப்பிட்டார்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டிருக்கக் கூடும் என நம்புவதற்கு ஏதுவான ஆதாரங்கள் கண்டறியப்பட்டன.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கின்றன. ஆனால், போர்க் குற்றங்களிலும் இனப்படுகொலையிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக எந்தவொரு குற்றவியல் விசாரணைகளோ அல்லது சிறப்பு நீதிமன்ற விசாரணைகளோ மேற்கொள்ளப்படவில்லை என அவர் தீவிர கரிசனையை வெளிப்படுத்தினார். இதேபோன்று, "பாதிக்கப்பட்டோர், அவர்களது குடும்பத்தினர், தப்பிப்பிழைத்தோர் என யாருக்கும் செவிசாய்க்கப்படவில்லை. இந்த நிலையில், குற்றவாளி களுக்குத் தண்டனை வழங்குவதற்கு இலங்கை அரசு தவறியிருப்பதுடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடிய ரோம் சாசனத்தில் கைச்சாத்திடுவதற்கும், இவ்விவகாரம் சார்ந்த அரசியல் தன்முனைப்பை வெளிப்படுத்துவதற்கும் தவறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் மக்களுக்குரிய நீதியையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது பிரித்தானியா தொடர் அழுத்தங்களைப் பிரயோக கிக்குமா" எனவும் உமா குமரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வெற்றே கூப்பர், தமிழ்ச் சமூகம் தொடர்பில் நீண்டகாலமாகத் தாம் கொண்டிருக்கும் நியாயபூர்வமான கரிசனைகள் தொடர்பில் பிரஸ்தாபித்தார். அத்தோடு மனித உரிமைகள் சார்ந்து நிலவும் கரிசனைக்குரிய விடயங்களுக்குத் தீர்வுகாணுமாறு தாம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருவதாகவும், இருப்பினும் இதுசார்ந்த நிலையான நடவடிக்கைகள் அவசியம் எனவும் அவர் கூறினார்.

"மனித உரிமைகள் நிலவரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான செயல்திறன்மிக்க, நிலையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கியிருக்கின்றோம்.

அதுமாத்திரமன்றி கடந்த மார்ச் மாதம் நால்வருக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் தடைகளை விதித்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே, இவ்விவகாரம் தொடர்பான நடவடிக்கைகள் முன்நோக்கியே நகர்கின்றன" என வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனைப் பெரிதும் வரவேற்பதாகத் தெரிவித்த உமா குமரன் எம். பி., இலங்கை போர்க் குற்றவாளிகளுக்கு எதிரான பிரித்தானிய அரசாங்கத்தின் தடைவிதிப்பு மேலும் பரவலாக்கப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார். (எ)

## தையிட்டி...

அதனை அகற்றுவதற்கு முற்பட்டால் அதற்கு எதிராக நாங்கள் கிளர்ந்தெழுவோம். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வசமிருந்த காணியில் 98 சதவீதம் விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திஸ்ஸ விகாரை தொடர்பில் அநீதியான தகவல்களை பரப்பக்கூடாது. இலங்கை பௌத்த நாடென்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். திஸ்ஸ விகாரையில் பௌத்த மக்களுக்குரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகின்றது. அதற்கு எதிராக கஜேந்திரகுமாரின் ஆட்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

ஆனால், இவர்கள் கொழும்பில் சுதந்திரமாக கோவிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங்கை பௌத்த நாடென்பதால்தான் இது சாத்தியப்படுகின்றது.

இலங்கையில் வேறொரு மதம் பெரும்பான்மையாக இருந்திருந்தால், அந்த மதத்துக்கு எதிராக செயல்பட்டுவிட்டு சுதந்திரமாக இருக்க முடியுமா? பௌத்த தர்மம் ஊடாக வழங்கப்பட்ட போதனைகளால்தான் பொறுமை காக்கின்றோம்.

ஆனால், அந்த பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, தமிழர் தாயகத்தில் விகாரை கட்ட முடியாது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்றது.

இது தொடர்பில் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு என்ன? வடக்கு- கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமைகளை நாசமாக்கும் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது"- என்றார். (எ)

## பரராஜசிங்கம்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபை முதல்வர், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

## மீண்டும்...

துக்கு முன்பே அவர் நுகேகொடையில் உள்ள இல்லத்துக்கு வந்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், தேவைப்படின் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான இலகுத்தன்மை கருதியே அவர் கொழும்புக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதங்கள் திருத்தப்பட்டதை தொடர்ந்து, கொழும்பு 07, விஜேராம மாவத்தை அரச இல்லத்திலிருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ வெளியேறினார்.

அரச இல்லத்திலிருந்து வெளியேறிய பின்னர், சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக அவர் தங்காலையில் உள்ள பூர்வீக இல்லமான "கார்ல்டன்" இல்லத்தில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ)

## சுனாமி பேரழிவு...

8.30 மணி முதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் விதமாக இன்று காலை 9.25மணி முதல் 9.27 வரை நாடு முழுவதும் மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி நாட்டை தாக்கிய சுனாமி 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர். ஆழிப் பேரலை நாட்டின் 14 மாவட்டங்களை தாக்கியது. இதில், வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிக பாதிப்புகளை எதிர்கொண்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் சுனாமி தாக்கிய நேரமான 9. 25 மணிக்கு நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன. இதேபோன்று, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயம் மற்றும் ஆழிப்பேரலை தாக்கிய வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, தாளையடி, மணற்காடு பிரதேசங்களிலும் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

2004 டிசெம்பர் 26 அன்று சுமாத்திரா தீவுக்கு அண்மையாக கடலில் 9.3 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டது. இலங்கை, இந்தியா, இந்தோனேசியா உட்பட 6 நாடுகளை தாக்கிய இந்த ஆழிப்பேரலையால் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 167 பேரின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டது. 43 ஆயிரம் பேர் வரை காணாமல் போயினர் அல்லது அவர்களின் மரணம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அரசமைப்பை...

பேரினவாத போக்கையும் முடிவுக்குக் கொண்டுவருவதாக உறுதியளித்தது. இருப்பினும், தேசிய மக்கள் சக்திக்கான சிறுபான்மையினத்தவரின் ஆதரவு என்பது அவர்கள் இதுவரை முன்னுரிமை அளித்து வந்த விடயங்களில் ஏற்படும் மாற்றத்துக்கு சமமானதா? இதுவரை சிறுபான்மையின அரசியல் வடிவமைத்த அவர்களது நீண்டகால கோரிக்கைகளான மனித உரிமைகள், நீதி மற்றும் அரசியல் சுயாட்சி என்பவற்றிலிருந்து விலகிச் செல்வதற்கு சமமானதா? என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

இருப்பினும், இலங்கை சுதந்திரமடைந்திலிருந்து நாம் அறிந்த சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவம் இப்போது வெகுவாக மாற்றமடைந்துள்ளது. பழைய தேசிய அரசியல் கட்சிகள் தம்மைத்தாமே நிலைமாற்றத்துக்கு உட்படுத்திக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தச் செயன்முறையின்போது மிகப்பொருத்தமான சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்புகள் உருவாகும்.

தற்போது தேசிய மக்கள் சக்தியிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தி இலங்கையின் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வரலாற்று முக்கியத்துவம் மிக்க வாய்ப்பு அதன் வசம் உள்ளது.

அதேபோன்று, நீண்டகால வர லாற்றைக்கொண்ட உரிமைகள் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளுக்கும், மூன்று தசாப்தகால மோதலுக்கு வித்திட்ட அடிப்படைக்காரணங்களுக்கும் தீர்வு காண் பதே சகல கட்சிகளினதும் முன்னுரிமைக்குரிய இலக் காக இருக்கவேண்டும். இதன்படி, புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரை 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## யாழ். புனித...

களுக்கு உதவுமாறு திருச்சபைகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மிக எளிமையாக ஆராதனைகள் நடைபெற்று, மக்கள் எளிமையாக நத்தாரை கொண்டாடினர்.

அதேநேரம் மரியன்னை தேவாலய நள்ளிரவு வழிபாட்டில் கடற்தொழில் அமைச்சர் இரா. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (எ)



## இலங்கையின்...

அவர் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்த அவர், நாட்டின் உயர் மட்ட பிரமுகர்களை சந்தித்த பின்னர் இந்தியாவுக்கு திரும்பினார்.

இந்த பயணம் தொடர்பில் எக்ஸ் பதிவில் கருத்துகளை பகிர்ந்துகொண்ட அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்கான முன்னுரிமை தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதில் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் இந்தியாவின் ஆதரவை மீண்டும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை மஹாசாகர் திட்டத்தின் கீழ், சூறாவளியால் பேரழிவில் சிக்கிய இலங்கைக்கு உதவ ஒப்ரேஷன் சாகர் பந்து ஆரம்பிக்கப்பட்டதாக ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

தமது இலங்கை பயணத்தின் போது, டித்வா சூறாவளிக்கு பிறகு மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த செவ்வாய்க்கிழமை ஜெய்சங்கர் இலங்கையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், வடக்கு- கிழக்கு, மலையகத்தின் தமிழ் அரசியல் வாதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். (எ)

## கோட்டாவின்...

இராணுவ அதிகாரியை நியமிப்பது அரச நிர்வாக சேவையை புறக்கணிப்பதாகுமென ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுயாதீன தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்தை அரசியல் மயப்படுத்தவே ஜனாதிபதி முயற்சிக்கிறார். கணக்காய்வாளர் நாயகம் பதவி கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து வெற்றிடமாகியுள்ளது. இந்த பதவிக்கு தனது பல்கலைக்கழக நண்பனை நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரையை அரசமைப்பு பேரவை நிராகரித்தது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியால் இதுவரையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அரசமைப்பு பேரவை நிராகரித்துள்ளது. இறுதியாக இராணுவ அதிகாரி ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது அதனையும் அரசமைப்பு பேரவை நிராகரித்தது.

அரச உயர் பதவிகளுக்கு தகுதி மற்றும் சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி பொய்யாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராணுவத்துக்கு முன்னுரிமை என்ற கொள்கையை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடைப்பிடிக்க கூடாது. தேசிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு இராணுவ அதிகாரியை நியமிப்பது அரச நிர்வாக சேவையை புறக்கணிப்பதாகும்.

தேசிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு கணக்காய்வாளர் திணைக்களத்தில் உள்ள சிரேஷ்ட அதிகாரியை நியமிக்க வேண்டும் அல்லது அரச நிர்வாக சேவையில் உள்ளவரை நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டாலும் மண்சரிவு ஆபத்து நீங்கவில்லை!

கொழும்பு, டிசெ. 26

மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கைகள் நீக்கப்பட்டபோதிலும் அந்த இடங்களில் இன்னும் ஆபத்து நீங்கவில்லை என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மழை நிலைமை குறைவடைந்தமையால் சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டிருந்தாலும் அதிகாரிகள் வந்து குறித்த ஆபத்தான இடங்களைப் பரிசோதிக்கும் வரை பொதுமக்கள் அந்த இடங்களுக்கு செல்ல வேண்டாம் என்று அந்த அமைப்பின் சிரேஷ்ட புவியியலாளர் ஹசலி சேமசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## சுற்றுச்சூழல் சட்டங்களை மீறினால் கடும் நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 26

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் நடைமுறையில் உள்ள சட்டங்களை மீறுவோர்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சுற்றுச்சூழல் சட்டங்களை மீறிய 23 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் இதேபோன்ற விசேட சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெறும். சட்டங்களை மீறுவோருக்கு எவ்வித தளர்வும் வழங்கப்படமாட்டாது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பாகும். பொதுமக்கள் இத்தகைய சட்ட விரோத செயல்பாடுகள் குறித்து தகவல் வழங்கினால் அதற்கேற்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 1,000 கோடி ரூபாய் நட்டஈடு கோரி பிரதி அமைச்சர் அவதூறு வழக்கு

கொழும்பு, டிசெ. 26

தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காக ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கோரி பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல வழக்கு தொடர்ந்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த மகிந்த பத்திரணவுக்கு எதிராகவே அவர், கொழும்பு - கடுவலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த அவதூறு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் மகிந்த பத்திரண தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "கொழும்பு சினமன் லைஃப் சொகுசு குடியிருப்பு வளாகத்தில் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பை வாங்கியுள்ளார். இந்தச் சொத்து வாங்குவதற்கான நிதி ஆதாரம் சந்தேகத்திற்குரியது. இது கையூட்டு மூலம் பெறப்பட்ட பணமாக இருக்கலாம்", என்று கூறியிருந்தார்.

இந்த பதிவின் மூலம் தனது அரசியல் வாழ்க்கையையும் தனிப்பட்ட கௌரவத்தையும் சீர்குலைக்கும் நோக்கில் திட்டமிட்டு பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது என்று கூறியே இப்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொல்லப்பட்ட யானைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 26

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கொல்லப்பட்ட யானை களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் 18 வரை 409 யானைகள் கொல்லப்பட்டுள்ளன என்று வனவிலங்கு பாதுகாப்பு துறையின் பிரதி பணிப்பாளர் யு.எல். தௌபிக் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு (2024) 388 யானைகள் கொல்லப்பட் டன. இந்த ஆண்டில் கடந்த 18ஆம் திகதி வரையில் 409 யானைகள் கொல்லப் பட்டன. இதில், 71 யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியும் 56 யானைகள் மின்சாரம் தாக்கியும் 20 யானைகள் ரயில் மோதியும் 48 யானைகள் வேட்டை யாடப்பட்டமையாலும் இறந்தன என்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# நாட்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

தற்போதைய அரசாங்கம் கருத்துச் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை இட்டு, நாட்டை சர்வாதிகார ஆட்சியை நோக்கிக் கொண்டு செல்ல முயற்சிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஊடக சுதந்திரம்மீதான அரசாங்கத்தின் அழுத்தம் குறித்து நேற்று விசேட அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு ஜனநாயக நாட்டின் நான்கு முக்கிய தூண்களாக சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் ஊடகம் ஆகியவை விளங்குகின்றன. ஆனால், தற்போதைய அரசாங்கம் பொலிஸை கருவியாகப் பயன்படுத்தி, மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பொலிஸில் பணிபுரியும் அதிகாரிகளின் உரிமைகளையும் மீறி வருகிறது.

உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை பறித்து, ஒரு "பொலிஸ் அரசை" உருவாக்க அரசாங்கம் முயல்கிறது. "சுதந்திர ஊடகங்கள் தங்களின் கருத்துகளை ஆதாரங்களுடன் முன்வைத்தாலும் அதைத் தடுத்து ஊடகங்களை ஒடுக்க பொலிஸாரை பயன்படுத்துவது ஜனநாயகத்துக்கு எதிரானது. மக்களின் ஆணை சர்வாதிகாரத்துக்கானது அல்ல மக்களின் அமைதியான பெரும்பான்மையினரின் குரலாக சுதந்திர ஊடகங்கள் விளங்குகின்றன.

அவற்றை ஒடுக்குவது என்பது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் செயலாகும். மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வழங்கிய ஆணை, சர்வாதிகாரத்தை நிலைநாட்டவோ அல்லது ஒரு "பொலிஸ் அரசை" உருவாக்கவோ வழங்கப்பட்டது அல்ல - என்றார். (ஐ)

## 597 பேர் கைதாகினர்

கொழும்பு, டிசெ. 26

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளில் 597 பேர் கைது செய்யப்பட்டனர். இதன்போது, 29 ஆயிரத்து 727 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைதானவர்களில் 25 பேர் குற்றங்களுடன் நேரடி தொடர்புடையோராவார். அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 218 பேரும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 136 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 136 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 36 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், போக்குவரத்து விதிகளை மீறிய 4 ஆயிரத்து 795 பேர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரி-56 ரக துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 26

ரி-56 ரக துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு - கிராண்ட்பாஸ் - ஜோசப் வீதியில் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 27 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் கொழும்பு 14ஐ சேர்ந்த 67 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## போதைப்பொருள் கடத்தல்காரர் பிஸ்டல் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, டிசெ. 26

போதைப்பொருள் கடத்தல்காரரான "குடு ரொஷான்" என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மட்டக்குளியில் அமைந்துள்ள அவரின் வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 9 மி. மீ. ரக பிஸ்டல் துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தப்படும் 3 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. (ஐ)

## ஹிக்கடுவை நகர சபை பாதீடு 3ஆவது முறையாக தோல்வி

கொழும்பு, டிசெ. 26

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையிலிருந்த காலி - ஹிக்கடுவை நகர சபையின் பாதீடு மூன்றாவது முறையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

பாதீட்டை அங்கீகரிப்பதற்காக நகர சபை நேற்று முன்தினம் தவிசாளர் யசஸ்வின் கொடகந்த தலைமையில் கூடியது.

இந்தநிலையில் வாக்கெடுப்பின் போது, 9 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாகவும் 10 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். இதனால், ஒரு வாக்கால் பாதீடு மூன்றாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது. (ஐ)

## பேரிடரால் கண்டி மாவட்டத்தில் 42 சிறார் பெற்றோரை இழந்தனர்

### அனர்த்த முகாமைத்துவ நிலையம்

கொழும்பு, டிசெ.26

நாட்டில் ஏற்பட்ட அதிதீவிர வானிலையால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட கண்டியில் 32 சிறார்கள் தந்தையையும் 7 சிறுவர்கள் தாயையும் 3 சிறுவர்கள் பெற்றோர் இருவரையும் இழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டத்தில், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக ரணவீர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும், பேரிடரால் 323 கர்ப்பவதி தாய்மார்களும் 5 வயதுக்கு உட்பட்ட ஆயிரத்து 791 குழந்தைகளும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தப் பேரிடரால் 241 பேர் உயிரிழந்தனர். 68 பேர் காணாமல் போயுள்ளனர். 114 பேர் காயமடைந்துள் ளனர்.

தவிர, ஆயிரத்து 959 வீடுகள் முழுமையாகவும் 16 ஆயிரத்து 565 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன், 55 ஆயிரத்து 804 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 335 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கத்தியை வைத்து மிரட்டிய இலங்கையர் ஜப்பானில் கைது

ரோக்கியோ, டிசெ. 26

தனது கழுத்தில் கத்தியை வைத்து இறந்துவிடுவேன் என்று மிரட்டிய இலங்கையர் ஜப்பானில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரோக்கியோ மினாடோ-குவில் பகுதியில் உணவகம் ஒன்றின் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 22ஆம் திகதி ஜப்பானின் துப்பாக்கி, வாள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டில் அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த நபர் தான் வைத்திருந்த கத்தி மூலம் கை, கால்களில் காயத்தை ஏற்படுத்திய அவர் தனது கழுத்தில் கத்தியை வைத்து தன்னை விடுவிக்காவிடின் இறந்து விடுவேன் என்று மிரட்டியுள்ளார்

அவருடன், பேச்சு நடத்தியவாறே சுமார் 10 வரையான பொலிஸார்கூடி அவரை கைது செய்தனர். அவருக்கு அருகில் இருந்த எவருக்கும் குறித்தநபர் தீங்கிழைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 26

கொழும்பு - கொட்டாஞ்சேனை பகுதியில் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமையக அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 310 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 60 ஆயிரம் ரூபாய் பணம், கார் என்பவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் கொழும்பு 13 ஐ சேர்ந்த 30 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org